1973 நவம்பர் 28]

சூரியப்பட்டி அருகே அணை.

*460. வினு.—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு பெதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், கணவாய்புதூர் ஊராட்சிப் பகுதி 'சூரியப்பட்டி' கோம்பையின் பெரும் பள்ளத்தில் அணை ஒன்று கட்டுவதற்கு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இரண்டு மாற்றுத் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் கைவிடப்பட்டு விட்டன.

திரு. வீ. செல்லதுரை: அது மிகவும் வரண்ட பகுதி. அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிருர்கள். அந்தத் திட்டத்தை மீண்டும் அமுலாக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஏராளமான காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் நீரில் மூழ்கும், அதனுல் ஏராளமான சந்தன மரங்கள் பாதிக்கப்படும் என்று வன இலாகாவைச் சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே, தற்பொழுது இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் வழங்கல்

*461 வினு.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணனன் மண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து கால்வாய் வெட்டி அதன் மூலம் ஏரிகளுக்குத் தண்ணீர் விடும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (இ): சாத்தனூர் அணையிலிருந்து வாய்கால் வெட்டி செங்கம், திருவண்ணமலை தாலுக்காக்களில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று முன்னேடி ஆய்வில் உள்ளது.